செய்தி வெளியீட்டு எண்: 413 நாள்:25.7.2009

பத்திரிக்கை செய்தி

மருந்து கடைகளில் மருத்துவர்களின் பரிந்துரை இல்லாமல் தூக்கமாத்திரைகள் தவறான பயன்பாட்டிற்கு விற்பனை செய்யப்படுவதாக புகார்கள் அரசுக்கு வந்ததால், மருந்துக்கடைகளை திடீர் ஆய்வு செய்யுமாறும், ஆய்வின் போது அவ்வாறு விற்பனை செய்யப்படுவது தெரியவந்தால் அவ்வாறு விற்பனை செய்யும் கடை உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் மருந்து கட்டுப்பாடு இயக்குனர் அறிவுறுத்தப்பட்டார். அதன் பேரில் மருந்து ஆய்வாளர்கள் கொண்ட 5 சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு, அந்த குழுக்கள் சென்னை புறநகர் பகுதிகளான படப்பை, மண்ணிவாக்கம், முடிச்சூர், பெருங்களத்தூர் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ஆகிய பகுதிகளில் உள்ள மருந்து கடைகளில் திடீர் ஆய்வு செய்தது.

மருந்து ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வின்போது, நைட்ரோவெட், டைஜீபாம், அல்பஸோலன், காம்போஸ், வேலியம், ரெஸ்ட்டில் போன்ற தூக்கமாத்திரைகள் மருத்துவர்களின் பரிந்துரை சீட்டு இல்லாமல், மருந்து மற்றும் அழகு சாதனச் சட்டத்திற்கு புறம்பாக விற்பனை செய்யப்படுவது கண்டறியப்பட்டது. அவ்வாறு விற்ற 14 மருந்து கடைகளின் மீது மருந்து மற்றும் அழகு சாதனச் சட்டத்தின் விதி மீறல்களுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மருந்து கடைகளில் மருத்துவர்களின் பரிந்துரை இல்லாமல் யாரும் மருந்துகள் விற்க வேண்டாம் என்றும், இதுபோன்ற நடவடிக்கைகளில் யாரும் ஈடுபட வேண்டாம் என்றும், தவறும் பட்சத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் விற்பனையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

***********

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9